[1974 சனவரி 22

இணைப்பு

[1 ஆம் பக்கத்திலுள்ள 26 ஆம் எண்ணுள்ள உடுக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

நமது மாநிலத்தில் உள்ள வெவ்வேறு மருத்துவ நிலையங்கள் 'யுனிசெப் நிறுவனத்திடமிருந்து பெறும் உதவி பற்றிய விவரம் பின்வருமாறு :—

மருத்துவ கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவ மனைகள்.

1. அரசு பொது மருத்துவமனை, சென்னை :

மகப்பேறு—சிசு நல செவிலியர் பணி, பொது செவிலியர் பாட முறையோடு ஒருங்கிணைந்ததாக உள்ளதால், பாட போதனைக் கருவிகள் சில, தட்டச்சுப் பொறி, படி எடுக்கும் கருவி, விளக்க வரைபடங்கள், திரைப்படச் சுருள், திரைப்படம் காட்டும் கருவி, உருநிலைப் படிவங்கள் முதலிய காட்சி—கேள்விப் பொருள்கள், ஒரு மோட்டார்வண்டி ஆகியவற்றை சென்னை, அரசுப் பொது மருத்துவமனைக்கு 'யுனிசெப்' நிறுவனம் வழங்கியுள்ளது.

2. ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை :

1964, 1968-ஆம் ஆண்டுகளில் செவிலியர் பணிப் பாடபோதனைச் சாதனங்கள் தொகுதி, 'ஹெர்மெஸ்' ஆங்கிலத் தட்டச்சுப் பொறி, எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய, கையினால் இயக்கப்படக்கூடியபடி எடுக்கும் கருவி, உயரழுத்த சமையற் கருவி Pressure Cooker ஆகியவை 'யுனிசெப்' நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளன.

3. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை :

குழந்தை மருத்துவத் துறை, சமூக-நோய்த் தடுப்பு மருத்துவத் துறை ஆகியவை ஒவ்வொன்றுக்கும் (தோராயமாக) 3,000 டாலர் மதிப்புக்கு உபகரணங்கள், சாதனங்கள், புத்தகங்கள், வண்டிகள் ஆகியவை (கடனாக மட்டுமே) யுனிசெப் நிறுவனத்திடமிருந்து வந்துள்ளன.

4. அரசு ராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை :

1972-ல் யுனிசெப் நிறுவனத்திடமிருந்து உதவி பெற அரசு ராயப்பேட்டை மருத்துவமனை தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. 5,360 டாலர் மதிப்புக்குச் சாதனங்கள், புத்தகங்கள், ஜீப் ஆகியவை யுனிசெப் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளன.

1974 சனவரி 22]

5. அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.

ஆறு மோட்டார் வண்டிகள், உடற்கூறு சம்பந்தமான ஃபிரோலி விளக்கப் படங்கள் (Frohe Anatomy Charts) சேஸ் on (Chase babay), உடற்கூறு மாதிரி ஃபார் (Anatomical Mel Far), சேஸ் டால் (Chase doll) எனுமல் பூசப்பட்ட பாத்திரங்கள், சிறுநீர், மலம் கழிக்கும் பாத்திரம், குழிவு தட்டுகள், இடுக்கிகள், பாய் குழாய் (Aretery), நீக்கி (Probe), தட்டச்சுப் பொறி, உயரழுத்த சமையற் கருவி ஆகியவை யுனிசெப் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளன. மதுரையிலுள்ள மதுரை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த கண்நோய் சிகிச்சைத் துறைக்கு ரூ. 10,98,000 யுனிசெப் நிறுவனம் வழங்கியுள்ளது. மதுரையிலுள்ள மதுரை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த கீழ்க்காணும் துறைகளுக்கு மோட்டார் வண்டிகளையும் சாதனங்களையும் அந்நிறுவனம் வழங்கியுள்ளது :—

(1) சமூக-நோய்த்தடுப்பு மருத்துவத்துறை.

(2) சிசு நோய் மருத்துவத்துறை.

(3) சமூக-மகப் பேறு மருத்துவத் துறை.

(4) சிசுநோய் அறுவைச் சிகிச்சைத் துறை

(5) மனித இனவிருத்தி குடும்பநலத் திட்டம் மக்கள் தொகை மாறுபாடுகள் ஆய்வுத்துறை.

6. அரசு கஸ்தூரிபா காந்தி மகளிர்—குழந்தைகள் நல மருத்துவமனை, சென்னை.

அரசு கஸ்தூரிபா காந்தி மகளிர்—குழந்தைகள் நல மருத்துவமனைக்கு ரூ. 9,246.00 மதிப்புள்ள உணவு பழத் தயாரிப்புக் கருவி, மின் உற்பத்தி இயந்திரம், நோய் நுண்ம ஒழிப்புக் கருவி, திரைப்படம் காட்டுவதற்குரிய விளக்கு, திரைவில்லைப் படங்கள் காட்டும் கருவி, நாடா ஒலிப்பதிவுக் கருவிகள், வெப்பமானிகள், பணிக்களரி சாதனங்கள், நிழற் படமெடுக்கும் கருவி, பேனா போன்ற சிறு விளக்கு (Pen Flash) உரிய காலத்திற்கு முன்பே பிறந்த குழந்தைகளை வளர்க்கும் அமைவு (Incubator ஆகியவை யுனிசெப் நிறுவனத்தால், 1972-73-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

7. குழந்தைகள் நல நிலையம்—குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.

கருவிகள், மோட்டார் வண்டிகள், உணவு, மருந்துகள் ஆகிய வடிவத்தில் உதவி வழங்கப்பட்டு வருகிறது. குழந்தைகளுக்கான மருத்துவமனையுடன் இணைந்துள்ள புற மருத்துவ மனைகளுக்கு உணவும் மருந்துகளும் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன. புற மருத்துவமனைகளில் பயனுக்கென்றே மோட்டார் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. குழந்தைகள் நல நிலையம்—குழந்தைகள் மருத்துவ மனைக்கு, ஆண்டொன்றுக்கு தோராயமாக ரூ. 13,000 மதிப்புள்ள கருவிகள், யுனிசெப் நிறுவனத்தால் வழங்கப்படுகின்றன. யுனிசெப் நிறுவனத்தால் 4 ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று லாண்ட் ரோவராகும் (Landrover). ஏனைய மூன்றும் ஆட்களை ஏற்றிச் செல்வதற்கான வண்டிகள் ஆகும் (Personal carriers)

8. மகப்பேறு—மகளிர் நோய் மருத்துவ நிலையம்—மகளிர்—குழந்தைகள் மருத்துவமனை, சென்னை

கருவிகள், பொருட்கள் என்ற வடிவில், யுனிசெப் நிறுவனத்திடமிருந்து உதவி பெறப்பட்டு வருகிறது. சென்னையிலுள்ள மகப்பேறு மகளிர் நோய் மருத்துவ நிலையம், மகளிர்-குழந்தைகள் மருத்துவமனைக்கு புரொஜெக்டர் ஓவர் ஹெட் பிளேஸ்மெண்ட் லாம்டர், ஓவர்ஹெட் புரொஜெக்டர், நுண்ணோக்காடி (Microscope manocular), நுண்ணோக்காடி வெளிச்சம் (Microscope illumination) ப்ரான்கின் இன்ஃபான்ட்ஸ் (Frangentain infants) மோட்டார் ஊர்திகள், குளிர் பதனப் பெட்டி, உரிய காலத்திற்கு முன்பே பிறந்த குழந்தைகளை வளர்க்கும் அமைவு (Incubator) ஆகியவற்றை யுனிசெப் நிறுவனம் வழங்கியுள்ளது.

9. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி—மருத்துவமனை, செங்கற்பட்டு.

செங்கற்பட்டிலுள்ள செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு ரினல்ட் கார் ஒன்று, கருவிகள், குளிர்பதனப் பெட்டி, மிகு காய்ச்சல் உள்ள நோயாளிகளுக்கான வார்டுக்கு சீர்வளி சாதன அமைப்பு ஆகியவை யுனிசெப் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

10. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.

கோயம்புத்தூரிலுள்ள கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு "ஸ்டாண்டர்டு கருவிகள் தொகுதி" ஒன்றை யுனிசெப் நிறுவனம் வழங்கியுள்ளது.

1974 சனவரி 22]

11. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி—மருத்துவமனை திருநெல்வேலி.

திருநெல்வேலியிலுள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் குழந்தைகள் மருத்துவத் துறை மகப் பேறு-மகளிர் நோய் மருத்துவத் துறை ஆகியவற்றிற்கு, யுனிசெப் நிறுவனத்தின் உதவி எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சுகாதாரப் பணிகள்—குடும்ப நலத்திட்ட இயக்குநர் கட்டுப்பாட்டின்கீழுள்ள மருத்துவ மனைகள்.

1. மாவட்ட காசநோய் நலம் பேண் மருத்துவ நிலையங்களுக்கு யுனிசெப் உதவி.

ஆண்டு.	மருத்துவமனையின் பெயர்.	யுனிசெப் உதவியின் விவரங்கள். எக்ஸ் கதிர் பொறியும் ஓடல்கா புகைப்படக் கருவியும்.	ஆய்வுக் கூடச் சாதனங்கள்.	பி. சி. ஜி. சாதனங்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)
1965-க்கு முன்பு	மாவட்ட காசநோய் நலம்பேண் மருத்துவமனை, செங்கற்பட்டு.	எக்ஸ் கதிர் பொறியும் ஓடல்கா புகைப் படக்கருவியும், மதிப்பு ரூ. 1 லட்சம்.	ஒரு நுண்ணோக் காடியும் ஏனைய துணைக் கருவி களும்.	ஊசிக்குழாய் ஊசி, கத்திரிக்கோல் ஆகியவை அடங்கிய பி.சி.ஜி. பை ஒன்று.
,,	மாவட்ட காசநோய் நலம்பேண் மருத்துவமனை, தென் ஆற்காடு.	,,	,,	,,
,,	மாவட்ட காசநோய் நலம்பேண் மருத்துவ நிலையம், ராஜா மிராஸ்தார் மருத்துவ மனை, தஞ்சாவூர்.	,,	,,	,,
,,	மாவட்ட காசநோய் நலம்பேண் மருத்துவமனை, திருச்சிராப் பள்ளி.	,,	,,	,,

,,	திருநெல்வேலி காசநோய நலம்பேண் மருத்துவமனை, தூத்துக்குடி.	,,	,,	,,
,,	மாவட்ட காசநோய் நலம்பேண் மருத்துவமனை, இராமநாதபுரம்.	,,	,,	,,
,,	மாவட்ட காசநோய் நலம்பேண் மருத்துவமனை, நாகர்கோவில்.	,,	,,	,,
,,	மாவட்ட காசநோய் நலம்பேண் மருத்துவ நிலையம், எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.	,,	,,	,,
,,	மாவட்ட காசநோய் நலம்பேண் மருத்துவமனை, சேலம்.	,,	,,	,,
,,	மாவட்ட காசநோய் நலம்பேண் மருத்துவமனை, கோயம்பத்தூர்.	,,	,,	,,
,,	மாவட்ட காசநோய் நலம்பேண் மருத்துவமனை, வட ஆர்க்காடு.	,,	,,	,,
,,	மாவட்ட காசநோய் நலம்பேண் மருத்துவமனை, நீலகிரி.	,,	,,	,,
,,	மாவட்ட காசநோய் நலம்பேண் மருத்துவமனை, தர்மபுரி.	,,	,,	,,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1—1—1972 முதல் 31—12—1972 வரை யுனிசெப் நிறுவனத்திடமிருந்து வழங்கப்பட்ட மருந்துகள்

	மருத்துவமனையின் பெயர்.	ஐ. என். எச் மாத்திரைகள் 1—1—1972 முதல் 31—12—1972 வரை (இலட்சத்தில்).	எக்ஸ் கதிர் படச்சுருள்கள் 1—1—1972 முதல் 31—12—1972 வரை (இலட்சத்தில்).	குறிப்புரை.
	(1)	(2)	(3)	(4)
1	அரசு காசநோய்-நலம்பேண் செய்முறை விளக்கம்—பயிற்சி நிலையம், சேத்துப்பட்டு	10	130	கருவிகள் வடிவில்
2	மாவட்ட காசநோய் - நலம்பேண் மருத்துவ நிலையம், செங்கற்பட்டு	10	175	,,
3	மாவட்ட காசநோய்-நலம்பேண் மருத்துவமனை, வட ஆர்க்காடு	15	145	,,
4	மாவட்ட காசநோய்-நலம்பேண் மருத்துவமனை, தென் ஆர்க்காடு	5	120	,,
5	மாவட்ட காசநோய்-நலம் பேண் மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி	10	175	,,
6	,, சேலம்	3	150	,,
7	,, தருமபுரி	1	90	,,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

8	,,	நீலகிரி	2	45	,,
9	,,	கோயம்புத்தூர்	10	100	,,
10	,,	ராஜா மிராஸ்தார் மருத்துவ மனை, தஞ்சாவூர்	5	80	,,
11	,,	அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை	15	..	,,
12	,,	இராமநாதபுரம்	25	65	,,
13	,,	திருநெல்வேலி	4	150	,,
14	,,	கன்னியாகுமரி	7	50	,,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

யுனிசெஃப் நிறுவனம் வழங்கிய B.C.G. வண்டிகள்

தொ. எண்.	வண்டிகளின் எண்ணிக்கை.	மருத்துவமனையின் பெயர்.
(1)	(2)	(3)
1.	ஒன்று	அரசினர் தலைமையிட மருத்துவமனை, வேலூர், வட ஆர்க்காடு.
2.	ஒன்று	சென்னை-6-ல் உள்ள சுகாதாரப் பணிகள்—குடும்ப நலத்திட்ட இயக்குநர் அலுவலகத்தில் தற்பொழுது உள்ளது.
3.	இரண்டு	அரசினர் தலைமையிட மருத்துவமனை, கடலூர்.
4.	ஒன்று	அரசினர் தலைமையிட மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி.
5.	இரண்டு	அரசினர் தலைமையிட மருத்துவமனை, திருநெல்வேலி.
6.	ஒன்று	அரசினர் ராஜா மிராஸ்தார் மருத்துவமனை, தஞ்சாவூர்.
7.	மூன்று	திண்டுக்கல்லில் உள்ள மதுரை அரசினர் தலைமையிட மருத்துவமனை.
8.	ஒன்று	அரசினர் தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம்.
9.	ஒன்று	அரசினர் தலைமையிட மருத்துவமனை, கன்னியாகுமரி
10.	மூன்று	அரசினர் தலைமையிட மருத்துவமனை, கோயம்புத்தூர்.
11.	இரண்டு	அரசினர் தலைமையிட மருத்துவமனை, சேலம்.
12.	ஒன்று	அரசினர் தலைமையிட மருத்துவமனை, காஞ்சீபுரம்.
13.	ஒன்று	அரசினர் காசநோய்-நலம்பேண் செய்முறை விளக்க பயிற்சி நிலையம், சேத்துப்பட்டு, சென்னை-31.
14.	ஒன்று	செய்திப் பரப்பு அதிகாரி (காசநோய்) இவ்வண்டியைப் பயன்படுத்துகிறார். (சுகாதாரப் பணிகள்—குடும்ப நலத் திட்டத்துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6).

*12. **ரெனல்ட் கார்கள் :** மாவட்ட காச நோய் அதிகாரி, தனது மாவட்டத்தில் காசநோய் தடுப்புத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக தருமபுரி, மாவட்ட காச நோய் அதிகாரி நீங்கலாக மாவட்ட காசநோய் அதிகாரிகள்*

1974 சனவரி 22]

அனைவருக்கும் ஒரு ரெனல்ட் கார் வழங்கப்பட்டுள்ளது. எனவே, எல்லா மாவட்ட காசநோய் மருத்துவமனைகளுக்கும் யுனிசெஃப் நிறுவனத்தினால் மொத்தம் 12 ரெனல்ட் கார்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்

2. **ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு யுனிசெஃப் நிறுவன உதவி.**—யுனிசெஃப் நிறுவனம், அது வரையறுத்துள்ள அடிப்படைத் தகுதிகளைக் கொண்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பின்வரும் உதவிகளை வழங்குகிறது :—

(1) ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருக்கவேண்டிய கருவிகள்—தொகுதி.

(2) மக்கள் நல்வாழ்வுப் பணி செவிலியருக்கான சிறு பெட்டி.

(3) பேறுகால மருத்துவத்திற்கான சிறு பெட்டி.

(4) குளிர் பதனப் பெட்டி.

(5) நுண் உருப் பெருக்காடி.

(6) துணை நிலையக் கருவிகள்.

(7) வண்டி.

(8) மருந்துகளும் துணை உணவுப் பொருள்களும்.

8-வது இனத்தைத் தவிர மற்ற எல்லா இனங்களும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒரு முறைதான் வழங்கப்படுகிறது. மருந்துகளும் துணை உணவுப் பொருள்களும் ஒவ்வோர் ஆண்டும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 1 முதல் 7 வரையிலான இனங்களுக்கு சுமார் 28,058 ரூபாய் செலவாகிறது.

தற்பொழுது தமிழ்நாட்டில் 379 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இவற்றில், 215 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 8 இனங்களின் கீழ் உதவி பெற்றுள்ளன. 147 ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிலவகை உதவிகளை மட்டுமே பெற்றுள்ளன. மற்றவகை உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன. 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முழு உதவியையும் பெறத் தகுதி பெற்றுள்ளன. உதவி இனங்கள் வழங்கப்படுவது எதிர்பார்க்கப்படுகின்றது. 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் யுனிசெஃப் நிறுவனத்தில் உதவியைப் பெறுவதற்கான தகுதியை இன்னும் பெறவில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1974 சனவரி 22

யுனிசெஃப் நிறுவனத்தில் முழு உதவியையும் பெறத் தகுதியுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்திற்கும் எல்லா உதவிகளையும் வழங்கவும் ஆரம்ப சுகாதார நிலையங்களை யுனிசெஃப் நிறுவனத்தின் முழு உதவியையும் பெறத் தகுதியுடையனவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொழுநோய் மருத்துவமனைகள்

3. **அரசினர் தொழுநோய் மருத்துவமனைகளுக்கு யுனிசெஃப் நிறுவனத்தின் உதவி.**— யுனிசெஃப் நிறுவனம், அரசினர் தொழுநோய் மருத்துவமனைகளுக்கு பின்வரும் பொருள்களையும் மாத்திரைகளையும் வழங்கி வருகின்றது :—

1. டாப்சோன் மாத்திரைகள் (Dapsone tablets)

2. நுண் உருப் பெருக்காடிகள்.

3. தரம் உயர்த்தப்பட்ட தொழுநோய் துணை மருத்துவமனைகளுக்கு மோட்டார் வண்டிகள்.

அரசினர் தொழுநோய் மருத்துவமனைகளுக்கு யுனிசெஃப் நிறுவனத்தால் அளிக்கப்படும் உதவிகளுக்கு ஒவ்வோராண்டும் மேல்வரம்பு நிர்ணயிக்கப்படவில்லை. ஒவ்வொரு மருத்துவமனையிலும் ஒவ்வோர் ஆண்டும் பதிவாகும் பிணியாளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு டாப்சோன் மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. புதிதாக தொடங்கப்படும் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் எண்ணிக்கையையும் தரம் உயர்த்தப்பட்ட தொழுநோய் துணை மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கையையும் அடிப்படையாகக் கொண்டு நுண் உருப்பெருக்காடிகளும், மோட்டார் வண்டிகளும் வழங்கப்படுகின்றன.

எனினும், பின்வரும் இனங்கள் ஒவ்வொன்றும் குறித்து 1972-ஆம் ஆண்டில் பெறப்பட்ட உதவியின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	(மதிப்பு ரூபாய்)
1. டாப்சோன் மத்திரைகள்	11,800.00
2. வண்டிகள்—இரண்டு	42,271.35
3. நுண் உருப்பெருக்காடிகள்—ஆறு	4,597.85